

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம், வி.சாலை ஊராட்சியில் விக்கிரவாண்டி தொகுதியின் இடைத்தேர்தல் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா (எ) சிவசண்முகம், விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளைச் சேகரித்தார். மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ் மற்றும் ஜெ.ஜெயபால், கே.எஸ்.ராஜி, அப்துல் சலாம், வேல்முருகன், சாவித்திரி பாலு, ராம்குமார், வி.சி.க. ஒன்றியச் செயலாளர் விஜயகுமார், சாலை இராமலிங்கம் , சங்கர், கவியரசு, குமரவேல், அம்பிகா கலைச்செல்வன், ராஜி, சிவக்குமார், சம்பத், முருகன், வெங்கடேசன், பசுபதி, ரவி, வழக்கறிஞர்கள் கேசவன், கிளியனூர் விநாயகமூர்த்தி, ராஜசேகரன், ந.முகிலன், வேலு, ஏழுமலை, முனுசாமி, செல்வகுமார், ஜெ.குப்புசாமி, புஷ்பராஜ், குழந்தைவேலு, சம்பத், சுப்பிரமணி, பிரசன்னா, சுரேஷ், வேலு, ராஜி, சக்திவேல், சதீஷ் , செந்தில் விசிக ஆசைமணி, ஆசிரியர் கோபால் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## ஒன்றிய அமைச்சர் வீடு முற்றுகை!

# ‘நீட்’ தேர்வை ரத்து செய்யக்கோரி போராட்டம்!

## ரூபாய் நோட்டுகளை வீசி காங்கிரசார் கண்டன முழக்கம்!

டெல்லி, ஜூன் 22-

நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி காங்கிரஸ் சார்பில் போராட்டம் நடைபெற்றது. ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் வீடு முற்றுகையிடப்பட்டு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ரூபாய் நோட்டுகளை வீசியெறிந்து கண்டன முழக்கங்களை காங்கிரசார் எழுப்பினர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பணம் பெற்றுக் கொண்டு நீட் முறைகேடுகள் அரங்கேற்றப்பட்டதை கண்டித்து டெல்லியில் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் வீடு முன்பு பணத்தை வீசியெறிந்து மாணவர் காங்கிர ஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பணத்தை பெற்றுக் கொண்டு நீட் கேள்வித் தாளை கசியவிட்டது, பணம் பெற்றுக் கொண்டு ஆள்மாறாட்டம் செய்து நீட் தேர்வை எழுதியது என நீட் தேர்வில் ஏராளமான முறைகேடுகள் அரங்கேற்றப்பட்டன. இதற்கு பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில், டெல்லி ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் வீட்டை முற்றுகையிட்டு மாணவர் காங்கிரஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தேசிய தேர்வு முகமையைக் கலைக்கவும், நீட் தேர்வை ரத்து செய்யவும் அப்போது வலியுறுத்தினர். மேலும், பணத்தை பெற்றுக் கொண்டு கல்வித் துறையில் முறைகேடு செய்யும் ஒன்றிய அரசை கண்டிக்கும் வகையில், பணத்தை வீசியெறிந்து முழக்கங்களை எழுப்பினர்.

இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர் காங்கிரஸாரை காவல்துறையினர் கைது செய்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.



தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள் தலைமையிலான இந்தியா கூட்டணியின் கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணிக்கு வாக்களித்து வெற்றி பெற செய்த வாக்காளப் பெருமக்களுக்கு அன்னவாசல் நகரம் முழுவதும் நன்றி தெரிவித்து மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன் தலைமையில் நடைபெற்ற பிரம்மாண்ட வாகன பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர் செ. ஜோதிமணி நன்றி தெரிவித்து உரையாற்றினார்.நிகழ்வில் விராலிமலை தொகுதி பார்வையாளர் டாக்டர் அஞ்சுகம் பூபதி, அன்னவாசல் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சந்திரன், வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் முருகேசன், காங்கிரஸ் கமிட்டி பொதுச்செயலாளர் பெனட், தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் எம்.செந்தில் குமார் , நகர செயலாளர் முகம்மது ரிசா, விடுதலைச் சிறுத்தைகள் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் வெள்ளை நெஞ்சன், சிபிஎம் சங்கர் உள்ளிட்ட நிர்வாகிகள், ஆயிரக்கணக்கான கழகத் தோழர்கள், இந்தியா கூட்டணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## இந்திய தவ்ஹீத் ஜமா அத் தலைவர்

# எஸ்.எம். பாக்கர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 22-

இந்திய தவ்ஹீத் ஜமா அத் தலைவர் எஸ்.எம். பாக்கர் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

இந்திய தவ்ஹீத் ஜமாஅத் தலைவர் எஸ்.எம்.பாக்கர் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து வருத்தமடைந்தேன்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், அமைப்பினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## குடியரசுத் தலைவர்

# திருமதி திரவுபதி முர்மு பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூன் 22-

குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு அவர்களின் பிறந்த நாளான நேற்று முன்தினம், அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில் குடியரசுத் தலைவர் அவர்கள் நல்ல உடல் நலனோடு பெரு வாழ்வு வாழ்ந்திட வேண்டுமென வாழ்த்தியுள்ளார்.



இந்திய குடியரசுத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை யொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு அவர்களுக்கு எனது பிறந்தநாள் நல்வாழ்த்துகள்.**

**நமது குடியரசுத் தலைவர் அவர்கள் நல்ல உடல்நலனோடும், மகிழ்ச்சியோடும், மனநிறைவளிக்கும் பெருவாழ்வினை வாழ விழைகிறேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## நிவேதா எம்.முருகன் தலைமை!

# மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய செயலாளர் ப.முருகமணி இல்ல திருமண வரவேற்பு விழா!

## அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஜூன் 22-

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை தாலுகா நல்லத்துக்குடி லால்பகதூர் சந்து தெருவைச் சேர்ந்த மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர், ஒன்றியக் குழு உறுப்பினர் ப.முருகுமணி திலகவதி இணையர் மகன் மு. பிரவீன்குமாருக்கும், சென்னை வளசரவாக்கம் சு.பாஸ்கர் சரஸ்வதி (எ) காளீஸ்வரி இணையர் மகள் பா.சுவாதி இவர்களின் திருமணம் கடந்த 17.6.2024 அன்று சென்னையில் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் இல்லத்தில் துர்காஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற திருமணத் முன்னிட்டு திருமண வரவேற்பு விழா நாளை (23.6.2024 ஞாயிறு) மாலை 6.00 மணிக்கு மயிலாடுதுறையில் புதுத்தெரு எஸ்.எஸ்.மஹாலில் நடைபெறுகிறது.

திருமண வரவேற்பு விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமையில் தலைமை தாங்குகிறார்.,

தமிழ்நாடு அரசு டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமை அரசு கொரடா கோவி.செழியன் எம்.எல்.ஏ, மயிலாடுதுறை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க. அன்பழகன், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் ராஜ்குமார் எம்.எல்.ஏ., மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா ஆகியோர் முன்னிலை வகித்து பேசுகிறார்.

தமிழ்நாடு மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்க திருச்சி மண்டல செயலாளர் ஆர்.சரவணகுமார் வரவேற்புரையாற்றுகிறார். விழாவில் கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி, நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், உழவர் நலன் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சுற்றுசூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குனர் திரு வெண்காடு ஜெயராஜ மூர்த்தி ஆகியோர் மணமக்களை வாழ்த்தி பேசுகிறார்.

திருமண வரவேற்பு விழாவில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், கழக விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், கழக விவசாயத் தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக. விரப்பாண்டியன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் நா.இளையராஜா, மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஜித்து(எ) எஸ்.ராஜரெத்தினம், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் மன்னை த.சோழராஜன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்திய சீலன், எம்.எம்.சித்திக், ஏ.சி.என்.சிவபாலன், எம்.பன்னீர்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, முத்து மகேந்திரன்,

இராம.இளங்கோவன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.இளையபெருமாள், மூவலூர் எம்.மூர்த்தி, செல்லசேதுரவிக்குமார், ஞான, இமையநாதன், மலர்விழி திருமாவளவன், மங்கை எம்.சங்கர், பி.எம். அன்பழகன், எம்.அப்துல்மாலிக், ஏ.ஜி.ஜெ.பிரபாகரன், பஞ்சுகுமார், அமிர்த.விஜயகுமார், கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா மற்றும் புலிவலம் ஏ.தேவா, குண்டமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பி.எம்.ஸ்ரீதர், பி. சிவதாஸ், ஹர்சத், நத்தம் ஏ.வின்சென்ட், ஜெ.கபிலன், எஸ்.சங்கரநாராயணன், மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர். முடிவில் நல்லாத்துக்குடி எஸ்.பி.என்.செந்தில்குமார் நன்றி கூறுகிறார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி ஆலோசனையின்படி ஈரோடு மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் லெமன் வி.நவீன்குமார் ஏற்பாட்டில் சோலார் அட்சயம் அறக்கட்டளை முதியோர் இல்லத்தில் காலை சிற்றுண்டி மற்றும் நல உதவிகளை வழங்கினர். நிகழ்வில் செல்ல பொன்னி, வீரமணி, குமாரவலசு ஊராட்சி மன்றத் தலைவர் இளங்கோ, ஜெ.திருவாசகம், கே.டி. சேந்தபுகழன், கி.ரகுராம் ச.சதீஷ்குமார், எஸ்.எம்.பாலசுப்பிரமணியம், எஸ்.எஸ்.விஜயராஜன், தெ.ராகவேந்திரன் இரா.நித்தின், பா.ஜாகிர் உசேன், சே.ரமேஷ், அ.பார்த்திபன், பெ.சீனிவாசன், அ.அன்பரசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர் பலர் உள்ளனர்.

## விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் பணியாற்றிட

# கழகத் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் - ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம்!

DMK IT WING

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேரதல் பணியில் தலைமைக் கழகத்தால் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் பணிக்குழுவுடன் இணைந்து கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் சார்பில் கீழ்க்காணும் நிர்வாகிகள் ஒருங்கிணைப்பாளர்களாகப் பணியாற்றுவார்கள்.

தகவல் தொழில்நுட்ப அணி விக்கிரவாண்டி இடைத்தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள்

| வ.எண் | ஒன்றியம் / பேரூர் | தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் |
|---|---|---|
| 1 | விக்கிரவாண்டி தொகுதி | திரு. அ.தமிழ்மாறன் மாநிலத் துணை செயலாளர் |
| 2 | கானை மத்தியம் ஒன்றியம் | திரு. AK தருண் மாநிலத் துணை செயலாளர் |
| 3 | கானை வடக்கு ஒன்றியம் | திரு. AK தருண் மாநிலத் துணை செயலாளர் |
| 4 | கானை தெற்கு ஒன்றியம் | திரு. AK தருண் மாநிலத் துணை செயலாளர் |
| 5 | விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம் | திரு. SD.இசை மாநிலத் துணை செயலாளர் |
| 6 | விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம் | திரு. SD.இசை மாநிலத் துணை செயலாளர் |
| 7 | விக்கிரவாண்டி மத்தியம் ஒன்றியம் | திரு. SD.இசை மாநிலத் துணை செயலாளர் |
| 8 | கோலியனூர் மேற்கு ஒன்றியம் | திரு. விஜயகதிரவன் மாநிலத் துணை செயலாளர் திரு.ஸ்ரீதர் மண்டல பொறுப்பாளர் |
| 9 | விக்கிரவாண்டி பேரூர் | திரு. மதுரை எஸ்.பாலா மாநிலத் துணை செயலாளர் |

வார் ரூம் மற்றும் தலைமை கழகத் தொடர்பு: திரு. அழகிரி சதாசிவம் மாநிலத் துணை செயலாளர்
மகளிர் ஒருங்கிணைப்பு : திருமதி.பத்மப்பிரியா மாநிலத் துணை செயலாளர்
சமூக வலைத்தள ஒருங்கிணைப்பு : திரு. MK.சிவா மாநிலத் துணை செயலாளர்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை
நாள்- 20.06.2024

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி



தஞ்சாவூர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான புதிய பேருந்து நிலையம் மருத்துவக்கல்லூரி இணைப்புச் சாலை, தஞ்சை பெரிய கோவில் சாலை வழியாக இராசா மிராசுதார் மருத்துவமனைக்கு பாதை அமைப்பது, தஞ்சை வட்டாட்சியர் அலுவலக சாலை வழியாக இராமநாதன் ரவுண்டானா வரை போக்குவரத்து இணைப்பு சாலை அமைப்பது உள்ளிட்ட பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் தீபக் ஜேக்கப், தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தஞ்சை மேயர் சண்.இராமநாதன் ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர்.

# கள்ளச்சாராய மரணம்: மேலும் ஒருவர் கைது!

## தமிழ்நாடு அரசு நடவடிக்கை!

கள்ளக்குறிச்சி, ஜூன் 22-

கள்ளக்குறிச்சி கருணாபுரம் கோமுகி ஆற்றங்கரையில் அந்தப் பகுதியைச் சேர்ந்த கனகு மகன் கன்னுக்குட்டி (எ) கோவிந்தராஜ் (49), அவரது மனைவி விஜயா (42), கனகுவின் மற்றொரு மகன் தாமோதரன் (40) ஆகிய மூவரும் கள்ளச்சாராயம் விற்பனை செய்து வந்துள்ளனர். இவர்களிடம் செவ்வாய்மற்றும்புதன்கிழமை காலை பலர் கள்ளச்சாராயம் அருந்தியவர்களில் இதுவரை 34 பேர் இறந்துள்ளனர். 70 க்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் எனவும் அஞ்சப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக கள்ளக்குறிச்சி காவல் ஆய்வாளர் ரு.ஆனந்தன் வழக்குப் பதிவு செய்து, கள்ளச்சாராய வியாபாரிகள் கன்னுக்குட்டி (எ) கோவிந்தராஜ், தாமோதரன் ஆகியோரை கைது செய்தனர்.

இந்த நிலையில், கோவிந்தராஜ் மனைவி விஜயாவை தனிப்படை போலீசார் கைது செய்துள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராம. நாராயணன்

### ஜூன் 22 (2014)



**கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட காரணத்தால், கழகம் ஆட்சிப் பொறுப்பில் இல்லாத காலத்திலும், பல்வேறு எதிர்ப்புகள், நெருக்கடிகள் இருந்தபோதும், கழக கொள்கைகளை தனது திரைப்படங்கள் மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தவர்.**

**1989ஆம் ஆண்டு காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**தனது வாழ்நாளின் ஆரம்பம் முதல் இறுதி வரை கழகத்தின்பால் முழுஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**